உ

சிவமயம்



யாழ் கந்தர்மடம் பழம் வீதி

# ஸ்ரீ சித்திவிநாயகர் திருவூஞ்சற் பதிகமும்

## நவக்ரஹ அஷ்டோத்திரமும்

வெளியீடுவோர்:

சிவஸ்ரீ ப. சோமாஸ்கந்தக்குருக்கள்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயகர் துணை

சிவஸ்ரீ. ப.சோமாஸ்கந்தக்குருக்கள் அவர்கள் 1935ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி சிவஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள் சரஸ்வதி அம்மாள் தம்பதியின் புதல்வராகவும் சிவஸ்ரீ சுப்பிரமணியஐயர் ஸ்ரீமதி யோகாம்பாள் கிருஷ்ணன், சிவஸ்ரீ தியாகராஜஐயர், டாக்டர் அம்பிகாபதி ஆகியோரின் சகோதரராகவும் பிறந்தார்.

தனது இளம் பருவத்திலே அந்தணர்க்குரிய அறு தொழிலான வேதம் ஓதுதல், ஓதுவித்தல், யாகம் புரிதலும், யாகம் செய்யுமாறு செய்தலும், பிறருக்கு கொடுத்தலும், தானும் பெறுதலுமே என்பதற்கமைய குருகுல வாழ்க்கையில் ஈடுபட்டு பழம்றோட்டு பிள்ளையாருக்கே தம்மை அர்ப்பணித்தார். இவர் விநாயகப்பெருமானுக்கு வேளை தவறாது பூஜை அனுஷ்டானங்களை இதய சுத்தியுடன் செய்தார். தனது தந்தையாரின் சொற்படி ஆலய பரிபாலனத்தின் பொறுப்பை ஏற்று சிறந்த ஆலயமாக காலம் தவறாத பூஜை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்த உற்சவம், பிள்ளையார் பெருங்கதை ஆகிய முக்கிய பூஜைகளையும் மற்றைய விழாக்களையும் செவ்வனே செய்து வந்தார். ஐயா அவர்கள்திரு.ஜெகந்நாதஐயர் ரெங்கம்மாள் தம்பதியரின் புதல்வி இராஜலட்சுமி அவர்களை மணந்து உஷா, ஸ்ரீனிவாஸன், சந்திரசேகரன் ஆகியோரை மக்களாகப் பெற்று இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்தார். தமது மக்களுக்கு மருகர்களாக முறையே சேஷாமணி, ஹம்சானந்தினி, சுபாஷினி ஆகியோரை மணம் முடித்து பேரர்களையும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தார்.

சிவஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்கள் ஐயா விநாயகப்பெருமானுக்குப் புரிந்திட்ட தொண்டுகள் பல, அவற்றில் குறிப்பாக ஆலய புனருத்தாரணம் மற்றும் அனர்த்தங்களால் எரிக்கப்பட்ட சித்திரத்தேர் புதுப்பித்தல் என்பவை குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் விநாயகப்பெருமானின் சேவையுடன் நின்று விடாது வேறுசில கோவில்களின் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தார். முக்கியமாக நீராவியடி கடையிற் சுவாமிகள் கோவிலின் திருப்பணியை சுட்டிக் காட்டலாம். இவர் வடக்கில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாகவும் பாரியாரின் உடல் நலக் குறைவினாலும் கொழும்புக்கு இடம்பெயர்ந்து வாழும் சூழ்நிலை ஏற்பட்டது. கொழும்பிலும் தமது மைத்துனர் சிவஸ்ரீ நாகராஜக்குருக் களுடன் இணைந்து பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிரேசன் ஆலயத்திலும் தன் முப்போதும் திருமேனி தீண்டும் பணியை மேற்கொண்டார். இறுதிவரை அவர் பழம் றோட்டுப் பிள்ளையாரின் நினைவாகவே இருந்து 04-11-2011 இல் சித்திவிநாயகப்பெருமானின் பாதார விந்தங்களைச் சென்றடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயகர் புராணம்

## காப்பு

திங்களணி சடைப்பெருமான் பூசை யாற்றித்
திரிமதிலுங் கடந்திடமுன் னின்றான் யாவன்
றங்குகடற் புலிவரைப்பி னெடியோ னாதி
சகலருக்கு முறுதவிர்க் கின்றான் யாவ
னங்கவன்மெய்ச் சரிதமொழி பெயர்ப்ப வேண்டி
யவனடியே சரணாக வடுத்து ளேற்கு
மங்கலசிந் மயமதுரத் தமிழ்ச்செம் பாடல்
வாரிமட மடையுடுத்து வளரு மன்றே.

## கடவுள் வாழ்த்து

அகரமென வறிவாகி யுலக மெங்கு
மமர்ந்தகர வுகரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொரு ணான்கினையு மிடர்தீர்ந் தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# யாழ் கந்தர்மடம் பழம் வீதி
# ஸ்ரீ சித்திவிநாயகர்
# திருவூஞ்சற் பதிகம்

**காப்பு**

உலகமெலாம் நிறைந்தவனே ஓங்கா ரத்தின்
உருவுடையாய், சிவக்களிறும்
உமையாள் என்னும்
மலைப்பிடியும் மகிழ்ந்தளித்த மகனே, ஆனை
வதனமுடன் ஐந்துகரம் சுளகுக் கர்ணம்
திலகநுதல் மணிமகுடம் திகழ நின்று,
சீரடியார் குறைதீர்க்கும் கருணைக்
குன்றே,
கலைமலரும் நினதருள்மேல் ஊஞ்சல் பாடக்
கருத்திருந்து தமதடிகள் காப்ப தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவூஞ்சல்

முந்தைய நூல் மறைநான்கும் கால்கள் ஆக,
முதுவறிவின் ஆகமங்கள் விட்டம் ஆக,
எந்தைபிரான் திருமுறைகள் தவிசே ஆக,
ஏராரும் பிரணவமே தோற்றம் ஆக,
உந்துகின்ற "சித்திபுத்தி" புரிய தாக,
உரு அமைந்த திருவூஞ்சல் உவந்து வைகிக்
கந்த(ர்)மடம் பழ்வீதி பதியில் வாழும்
ஸ்ரீசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல் (1)

ஆதிசிவன் வைரவரும் +சேயும் வாழ்த்த
அரும்வீர பத்திரரும் அமைந்தே வாழ்த்த,
கோதிலரி அயன்போகி0 தொழுது வாழ்த்த,
*கொடிநிலையும் சந்திரனும் சேர்ந்து வாழ்த்த,
ஏதமிலா முனிவரெலாம் கூடி வாழ்த்த,
எழில் கந்த(ர்) மடத்தடியார் தாமும் வாழ்த்த
"xபூதி"மிகு கந்த(ர்)மடப் பதியில் வாழும்
ஸ்ரீசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (2)

---

* கொடிநிலை - சூரியன்
+ சேய் - கந்தசுவாமி
x பூதி - செல்வம், (திருநீறு)
0 போகி - இந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனும் சூரியனும் குடைகள் தாங்க,
தவம்பெற்ற அரம்பையர்கள் கவரி வீச,
இந்திரனும் வானவரும் விருது பேண,
இறையவரும் உமையவரும் மாலை பூண,
கந்தருவர் கிம்புருடர் இசைகள் பாட,
கமலவயன் வேதநெறிப் பூசை செய்ய,
மந்திரஞ்சேர் கந்த(ர்)மடப் பதியில் வாழும்
மன்னுசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (3)

"தேசுநிறைத் திருமுறைகள்" எங்கே என்று
சீரடியான் "நம்பி" நின்முன் வெம்பி வேண்ட,
பேசுபுகழ்த் திருச்சிற்றம் பலத்திற் காட்டிப்,
பிறங்குசிவன் மெய்யடியார் நலமே சுரக்க
நேசவருள் புரிந்தஞான வல்ல பைக்கு
நிறைவான நாயகராய், நெடும்பூஞ் சோலை
வாசமிடுங் கந்த(ர்)மடப் பதியில் வாழும்
விரதசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுகவி ஔவைக்குக் கைலை காட்டி,
ஓததிரு அகவலிசை கேட்ட தேவா,
பொன்னெடுவேல் அழகனுயர் புனத்தில் வேண்டப்
பொலிகளிறாய் வந்துதிரு மணமும் செய்தாய்,
அன்னையப்பன் தம்மைவலம் வந்த போதே
அமுதமாங் கனிபெற்றாய், -"ஞானப்
பழத்தாய்!"
பன்னுபுகழ் கந்த(ர்)மடப் பதியில் வாழும்
பரசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (5)

செயலெல்லாம் நின்செயலே என்று போற்றுந்
திருத்தொண்டர்க் கினித்தவரம் கொடுப்பாய்
அப்பா!
கயமுகனைச் சங்கரித்துக் கருதுவா கனமாம்
கனித்தபெருச் சாளியிலே காட்சி தந்தாய்!
துயரமுறும் அடியேங்கள் சுகமாய் வாழத்,
தும்பிமுகா, தமதருளால் ஊக்குவாய்
அன்றே!
உயர்வளம்கொள் கந்த(ர்)மடப் பதியில் வாழும்
உறுசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுவர்தம் உள்ளத்தின் ஒளியாம் விளக்காய்
உணர்வாகி உயிராகி ஓங்கா ரத்தின்
துள்ளியெழும் உட்பொருளாய் ஆறா தாரம்
தொடர்ந்தெழுந்து சகஸ்ரதள வெளியி லாடும்
வெள்ளிமலைப் பரம்பொருளைச் சாரும் அன்பர்
வினையறுத்து மெய்ஞ்ஞான வீட்டில் ஏற்றும்
தெள்ளியர்சேர் கந்த(ர்)மடப் பதியில் வாழும்
தெளிசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (7)

எண்ணெழுத்தாய்த் தத்துவங்கள் அனைத்துமாகி,
எழுதாத மறைவெற்பில் எழுதித் தந்த
புண்ணியனே, பொலியண்டம் எங்கும் ஆகிப்
பூரிக்கும் பரப்பிரம்ம ஞான ரூபா,
கண்ணுதலான் தேர்இறுத்த கணேச மைந்தா,
கருதுமடி யார்நெஞ்சில் அமையும் செல்வா,
வண்ணமிகும் கந்த(ர்)மடப் பதியில் வாழும்
வயசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமுடி யோடுமதி வதனம் ஆட,
நாதமணிக் குழையோடு விழிகள் ஆட,
தாளமிகு கரமுமொற்றை மருப்பும் ஆட,
தனிப்பவள மார்பிலணி நூலும் ஆட,
தேனமுத வயிறுமரை ஞாணு மாட,
செம்பொன்னின் உடையுமணிக் கழலும் ஆட,
வானவர்சூழ் கந்த(ர்)மடப் பதியில் வாழும்
வரசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (9)

ஆரணத்தின் தனிப்பொருளே ஆடீர் ஊஞ்சல்,
ஆகமத்தின் முதற்குருவே ஆடீர் ஊஞ்சல்,
நாரணர்க்கு மருமகனே ஆடீர் ஊஞ்சல்,
நடனசபா பதிமகனே ஆடீர் ஊஞ்சல்
நீரணிகா விரிதந்தாய் ஆடீர் ஊஞ்சல்
நிறையுலகில் கலந்திருப்பாய் ஆடீர் ஊஞ்சல்
வாரணமே, கந்த(ர்)மடப் பழம்ஆர் வீதி
வாழ்சித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழி

மக்களெலாம் பணிந்தேத்த, வந்தே யமர்ந்த
சித்திவிநா யகப்பெருமான் திருத்தாள் வாழி!
பக்குவநான் மறையோர்கள் பசுக்கள் வாழி!
*பயன்நான்கின் வளம்வாழி! தருமம் வாழி!
மிக்கசிவ நெறிவாழி! புராணம் வாழி!
மேவுதிரு முறைவாழி! ஆகமம் வாழி!
ˣஅக்குதிரு நீற்றுமைந்தின் எழுத்தும் வாழி!
சித்திவிநா யகரடியார் வாழி! வாழி!!

---

* பயன் நான்கு - அறம், பொருள், இன்பம், வீடு
X அக்கு - உருத்திராட்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

மங்களம் சுப மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

சித்தாந்தச் சிவஞானத் திருநெறியே - மங்களம்
சீரிலங்கும் ஸ்ரீசித்தி விநாயகரே - மங்களம்
பித்துசிவன் பார்வதியும் பிறங்குயிரும் - மங்களம்
பீடுபணித் தொண்டர்களும் பூசுரரும் - மங்களம்

மங்களம் சுப மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

வன்பிலாப் பேரன்பின் வரநிதியே - மங்களம்
வளமாக்கி வாழவிக்கும் விநாயகரே - மங்களம்
மன்கந்த(ர்) மடக்கோவில் மேவுவார்க்கு -
மங்களம்
மங்கமரும் 'சித்திபுத்தி' மகிழ்வார்க்கு - மங்களம்

மங்களம் சுப மங்களம்
மங்களம் ஜெய மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்ரஹ அஷ்டோத்திர சத நாமவாளி

## சூரியன்

ஓம் மித்ராய நம
ஓம் ரவயே நம
ஓம் ஸுர்யாய நம
ஓம் பானவே நம
ஓம் ககாய நம
ஓம் பூஷ்ணே நம
ஓம் ஹிரண்யகர்ப்பாய நம
ஓம் மரீசயே நம
ஓம் ஆதித்யாய நம
ஓம் ஸவித்ரே நம
ஓம் அர்காய நம
ஓம் பாஸ்கராய நம

**ஸ்தோத்ரம்**

ஜபாகு சும சங்காஸம்
காஸ்ய பேயம் மகாத்யுதிம்
தமோரிம் சர்வ பாபக்னம்
ப்ரண தோஸ்மி திவாகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரன்

ஓம் ஸ்ரீ மதே நம
ஓம் சசிதராய நம
ஓம் சந்த்ராய நம
ஓம் தாராதீசாய நம
ஓம் நிசாகராய நம
ஓம் ஸுதாநிதயே நம
ஓம் ஸதாரத்யாய நம
ஓம் ஸத்பதயே நம
ஓம் ஸாது பூஜிதாய நம
ஓம் வீராய நம
ஓம் ஜயோத்யோகாய நம
ஓம் ஜயோதிச்சக்ரபஜவர் தகாய நம

**ஸ்தோத்ரம்**

ததி ஸங்க துஷா ராபம்
ஷிரோ தார்ணவ சம்பவம்
நமாமி சசி நம் ஸோமம்
ஸம் போர் மகுட பூஷணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குஜன்

ஓம் ஸ்ரீமஸ்தாப நம
ஓம் மஹாபாகாய நம
ஓம் மங்களாய நம
ஓம் மங்கள பரதாய நம
ஓம் மஹா வீராய நம
ஓம் மஹா சூராய நம
ஓம் மஹா பல பராக்ரமாய நம
ஓம் மஹா ரௌத்ராய நம
ஓம் பஹுபத்ராய நம
ஓம் மானனீனாய நம
ஓம் தயாகராய நம
ஓம் மானதாய நம

**ஸ்தோத்ரம்**

தரணீ கர்ப்ப ஸம்பூதம்
வித்யுத் காந்தி ஸமப்ரபம்
குமாரம் சதி ஹஸ்தம்ச
மங்களம் ப்ரணமாம் யஹம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதன்

ஓம் புதாய நம
ஓம் புதர்பர்சிதாய நம
ஓம் ஸௌம்யாய நம
ஓம் ஸௌம்ய சித்தாய நம
ஓம் சுபப்ரதாய நம
ஓம் த்ருடவ்ரதாய நம
ஓம் த்ருட பவாய நம
ஓம் ப்பருதிஜாலப் போதகாய நம
ஓம் ஸத்ய வாஸாய நம
ஓம் ஸத்யவசஸே நம
ஓம் ப்பரேயஸாம் பதயே நம
ஓம் அவ்ய யாய நம

**ஸ்தோத்ரம்**

ப்ரியங்கு கலிகா ஸ்யாமம்
ரூபேனாப்ரதிமம் பூதம்
ஸௌம்யம் ளௌம்ய குணோபேதம்
தம்புதம் ப்ரணமாம் யஹம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு

ஓம் ஸ்ரீ குருவே நம
ஓம் குணாகராய நம
ஓம் கோப்த்ரே நம
ஓம் கோசராய நம
ஓம் கோபதிப்ரியாய நம
ஓம் குணினே நம
ஓம் குணவதாம்ச்ரேஷ்டாய நம
ஓம் குருணாம் நம
ஓம் ஆங்கீர ஸாய நம
ஓம் ஜேத் ரே நம
ஓம் ஜயந்தாய நம
ஓம் ஜயந்தாய குரு நம

**ஸ்தோத்ரம்**

தேவா நாஞ்ம்சரிஶ்ரீணாஞ்ச
தேவானாஞ்சரி ஶ்ரீனாந்ஞ்ச
குரும் காஞ்சந ஸந்நிபம்
புத்தி பூதம் த்ரிலோ கேஷம்
தம் நமாமி ப்ருஹஷ்ஸ்பதிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுக்ரன்

ஓம் சுக்ராய நம
ஓம் சுசயே நம
ஓம் சுபகுனாய நம
ஓம் சுபதாய நம
ஓம் சுபலஹுணாய நம
ஓம் சோபனாக்ஷாய நம
ஓம் சுப்ரவாஹாய நம
ஓம் சுத்தஸ்படிக பாஸ்வராய நம
ஓம் தீனார்திஹராய நம
ஓம் தைத்யகுரவே நம
ஓம் பார்கவாய நம
ஓம் காவ்யாஸக்தாய நம

ஸ்தோத்ரம்

ஹிம் குந்தம்ருணா லாபம்
தைத்யாநாம் பரமம் குரு
ஸர்வஸாஸ்த்ர ப்ர உக்தாரம்
பார்கவப் ப்ரணமாம் யஹம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் காகத்வஜாய நம
ஓம் சனைச்சராய நம
ஓம் சாந்தாய நம
ஓம் ஸ்வாபீஷ்ட ப்ரதாயினே நம
ஓம் சரண் யாய நம
ஓம் வரண்யாய நம
ஓம் ஸர்வே சாய நம
ஓம் ஸௌம் பாய நம
ஓம் ஸுரலோகஷஹாரினே நம
ஓம் ஸுகாஸனொபவிஷ்டாய நம
ஓம் ஸுந்தாரய நம
ஓம் மந்தாய நம

ஸ்தோத்ரம்

நீலாஞ்ஜந ஸமா பாஸம்
ரவி புத்ரம் யமாக் ரஜம்
சாயா மார்த் தாண்ட ஸம்பூதம்
தம் நமாமி ஸநைஸ்ரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஹு

ஓம் ராஹுவே நம
ஓம் ஸைம்ஷிகாய நம
ஓம் விதுந்து தாய நம
ஓம் ஸுரசத்ரவே நம
ஓம் தமஸே நம
ஓம் பணினே நம
ஓம் கார்க்யாயனாய நம
ஓம் நீலஜி முதஸங்காசாய நம
ஓம் சதுர்பு ஜாய நம
ஓம் கட்க கேடகதாரிணே நம
ஓம் வரதாயக ஹஸ்தாய நம
ஓம் க்ருஷ்ணத் வஜபதாகவதே நம

**ஸ்தோத்ரம்**

அர்த்த காயம் மகா வீர்யம்
சந்த் ராதித்ய விமர்த நம
ஸிம் ஹியா கர்ப்ப ஸம்பூதம்
தம் ராஹீம் ப்ரணமாம் யஹம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org